# ஆத்மஜோதி



'பகவான் அரவிந்தர்'

# ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

...சுத்தானந்தர்...

சோதி 11 சுடர் 10. விகாரி ௵ ஆவணி ௴ 1-8-59.


## - பொருளடக்கம் -


| | |
|---|---|
| புதுவையோகி | 293 |
| துர்க்காஸ் தோத்திரம் | 294 |
| ஸ்ரீ அரவிந்தரின் ஆவேச மொழிகள் | 297 |
| அரவிந்த யோகம் | 298 |
| நான் புசித்த ஞானப் பழம் | 299 |
| நான்கண்டகலைப்புலவர் | 309 |
| ரமணர் | 311 |
| ஆத்மீக விடுதலையே வாழ்வின்...... | 313 |
| பெரியோர் கண்ட பூரண உண்மை | 314 |
| ஞானப் பிழம்பு | 316 |
| யோக ஆசனங்கள் | 318 |
| அருளுரை | 320 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ.75-00 வருடசந்தா ரூ. 3-00

— தனிப்பிரதி சதம் -30 —

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்: நா. முத்தையா.

ஆத்மஜோதி நிலயம்-நாவலப்பிட்டி (சிலோன்)


## புதுவை யோகி

—[மகரிஷி சுத்தானந்தர்]—

அலைகடல் ஓம்என் றார்க்கும், அமுதவாய்ப் புட்கள் ஆர்க்கும்
பலகலைத் தொழில்கள் ஆர்க்கும், பயனுள கல்வி ஆர்க்கும்,
அலதொரு சத்தமில்லா அமைதியில் ஓங்கு கின்ற
நிலையமே புதுவை யோகி அரவிந்த நிலையமாமே.

மலர்கனி குலுங்குகின்ற மலையென மாளி கைகள்
புலமைகள் குலுங்குகின்ற பொன்முக நல்லோர் கூட்டம்
தலைவரே தெய்வ மென்னும் சாதகர் சங்கம் ஓங்கி
நிலவிடும் சோயில் எங்கும் நிம்மதி காண லாமே.

துன்பமே யில்லை; யிந்தத் தொல்புவி வாழ்க்கை யெல்லாம்,
இன்பமே யாகு மென்றே இலக்கிட வந்து தோன்றி
அன்பருக் கரச னாகி அரவிந்த வள்ளல் வாழும்
தென்பெருந் திருவை குண்டம் இதுவெனச் செப்ப லாமே

கலைசிறந் தோங்கு கின்ற கல்கத்தா நகரில் வந்தே
அலைமுர சடிக்கும் இங்கி லாந்தினில் அமரக் கற்றே
தலைபெறும் புலவ னாகித் தனிப்பெருங் கவிஞ னாகி
விலையிலா் நூல்க ளீந்த வியன் பெறும் அறிஞன் இன்னோன்

உத்தம நாட்டின் சேவை யோகமாய்ப் புரிகவென்றே
நித்திய வழியைக் காட்டி நிகரிலா வள்ளலாரின்
புத்தலர் அருட்பா ஓங்கும் தமிழகப் புதுவை வந்தான்
சித்தன் எம்பெருமான் இங்கே புதுயுகந் திகழ வைத்தான்

புதுயுகச் சுடராம் எம்மான் புதுநகர் ஆக்கி யாங்கே
புதுஅதி மனிதர் சங்கம் புதியநா கரிகம் போற்,
முதுபெறும் உலகமெல்லாம் ஆனந்த முரசு கொட்டித்
துதிசெயப் புகழ் சுமந்து துலங்குக நலங்க ளோங்கி!

# துர்காஸ் தோத்திரம் ( பகவான் அரவிந்தர் )

தாயே கேள் - நீ பாரத தேசத்தில் ஆவிர்ப்பவித்து விளங்குவாயாக! மாதா துர்கே! யுக யுகமாக மாணிட உடல் எடுத்து, ஜன்ம ஜன்மமாக உன்பணி செய்து, உன் ஆனந்த நிலையத்திற்குத் திரும்புகிறோம். இந்த ஜன்மத்திலும் உன் காரிய விரதமே பூண்டோம் தாயே கேள்—நீ பாரதத்தில் எழுந்தருளி எங்களுக்குத் துணை செய்! மாதா துர்கே! சிம்ஹ வாகினீ, திரிசூல தாரிணீ வீறு படைத்த அழகிய மேனியளே, வெற்றிதரும் அன்னையே பாரதம் உன்னை எதிர்பார்க்கிறது உன் மங்களமய மூர்த்தியைக் காண உற்சாகங் கொண்டுள்ளது கேள் தாயே! நீ பாரதத்தில் எழுந்தருளி விளங்கு!

மாதா துர்கே! பலமளிப்பவளே, அன்பளிப்பவளே! ஞானமளிப்பவளே, சக்திப் பொலிவே, ஸௌம்ய ரௌத்திர ரூபியே, வாழ்க்கைப் போரிலும் பாரதப்போரிலும் உன்னால் ஏவப்பட்ட போர்வீரர்களான எங்களுக்கெல்லாம், ஹே மாதா! பிராணனிலும் மனத்திலும் இதயத்திலும் புத்தியிலும் தேவனை போன்ற நடையும் தேவதா ஞானமும் தந்தருள்,

மாதா துர்கே! சாமளே! சர்வ சௌந்தர்ய அலங்காரியே! ஞானப் பிரேம சக்திக்கு, ஆதாரமான பாரத பூமியில் இத்தனை நாட்கள் சக்தியைச் சேர்க்கவே உன் மகிமை காத்திருந்தது, வரும் யுகத்தில், வருங்காலத்தில் பாரதத்தின் பாரத்தைத் தன் புஜங்களிலே தாங்கவே பாரத ஜனனீ எழுந்து நிற்கிறாள். தாயே வந்து நிலவு!

மாதா துர்கே! உலகிற் சிறந்த பாரதஜாதி கோர இருளில் மூழ்கியிருக்கிறது. ஹே மாதா! நீ விண்ணில் மெல்ல மெல்ல உதிக்கிறாய், இருளைப் போக்கும் உன் விண்ணுடற் சோதியால் அருணோதயம் வந்தது, ஹே மாதா! ஒளியைப் பரப்பி இருளை நலி!



இத்தனை உபதேசங்கள் நடக்கின்றன. ஆனால். இன்னும் உண்மையான ஒற்றுமை காணப்படவில்லை'

இப்போதுள்ள மனித இயல்பே மாறவேண்டும். அதனாலேயே ஒற்றுமை ஓங்கும். இம்மாறுதல் யோகம் ஒன்றாலேயே முடியும். தற்கால மனித இயல்பும், பொருள்களியல்பும் முரண்பட்டு, இன்னிசை கெட்டபாட்டைப்போல் இணக்கங்கெட்டிருக்கின்றன மனிதனின் உள்ளம், செயல் முற்றும்மாற வேண்டும் ஆனால் மாறுதல் உள்ளிருந்து அரும்பவேண்டும் நம்முள்ளும் உலகிலும் ஆண்டவனைக்கண்டு அந்த ஆத்மசித்தியால், வாழ்வைப்புதுக்கி அமைப்பதினாலேயே அம்மாறுதல் வரும். அது பூரண யோகத்தாலேயே முடியும். செயலிலும் பாவனையிலும் ஆண்டவனை முற்றும் சரண்புக வேண்டும்.

ஒரு யந்திரம், அதை ஓட்டுவோன் கையில் அமைதியாகிறது. அதுபோலவே கடவுள் அன்பிற்கும் சர்வசக்திக்கும் முற்றறிவிற்கும், நமது ஜீவனத்தையும் அமைதியாகக் கொடுத்துவிட வேண்டும். அப்போதே ஆண்டவன் நம்மூலம் தனது காரியத்தையும் ஆடலையும் நிறைவேற்றுவான். நிறையின்பம், நிறையமைதி, அறிவு தெய்வ வாழ்வின் நிறை செயலையும் நமக்கருள ஆண்டவன் முடிவு செய்துள்ளான். அவற்றையடைய நாம் அகங்காரத்தை வேரோடு ஒழிக்கவேண்டும்.

ஆத்மசமர்ப்பண சங்கற்பமே யோகசாதனத்தின் முதற்படி. சங்கற்பமென்பது மனோநிச்சயம், முழு உள்ளத்துடனும் முழுப்பலத்துடனும் உன்னை ஆண்டவன் கைகளில் ஒப்பித்துவிடு. எவ்விதமான நிபந்தனைகளையும் செய்யாதே; ஒன்றுங்கோராதே யோகத்தில் சித்திவேண்டும் என்றுகூடக் கேட்காதே உன்னுள் உன் மூலம் நேராக, அவனிச்சை நடைபெற வேண்டும் என்பதைத் தவிர வேறெதையுங் கோராதே, கேட்டார்க்குக் கேட்டதையே கொடுக்கிறான்.

எதுவுங்கேளாது தம்மையே முற்றுங் கொடுப்பவருக்கோ அவர்கள் முன்பே கேட்டிருக்கக் கூடியதையும், தேவையையும் அளிப்பதுடன், தன்னையே தந்து தனதன்பிற் பூத்த வரங்களையும் அருளுகின்றான்.

தெய்வசக்தி உன்னுள்ளே செயல் புரிவதைப் பற்றற்றுப் பார்த்திருத்தலே இரண்டாவது சாதனப்படி. இந்தச்சாதனத்தால் அடிக்கடி உடலில் குழப்பமும் இடரும் உண்டாகும். ஆதலின் பக்தியும் நம்பிக்கையும் வேண்டும். கீதையின் வாக்கியங்கள் சிந்தித்தற்குறியன.

''உள்ளத்திலும் மனத்திலும் உன்னை எனக்கு அளி; என்னருளாலே இடர்விபத்துகள் எல்லாவற்றையும் தாண்டுவதுறுதி''

அறங்களனைத்தையும் அறவே விடுவாய்! உனது முற்பழக்கவழக்கம் ஐதீகம் பிறரால் உனக்கு விதிக்கப்பட்ட விதி நியமம், நெறி, சட்ட திட்டங்கள், அனைத்தையும் விடு, என்னையே சரண்புகு தீமை பாவமனைத்தினின்றும் உன்னை விடுவிப்பேன் வருந்தாதே.

என்னும் மொழிகளை நினை பொறுப்பு உன்னதல்ல பயன் உன் முயற்சிகளைச் சார்ந்ததல்ல; நீயேன் வருந்தியிடர்ப்படுகின்றாய் உன்னிலும் வல்லவன் காரியத்தைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளான். ஆண்டவனைச் சிக்கெனப்பற்று

'' யான் உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே ''

என்ற மணிவாசகரின் நிலை நமக்கு வரவேண்டும்.

இரண்டாம்படியினின்று மூன்றாவது நிலை எய்துகிறது, பூரண தெய்வானுபூதியால், அல்லது ஆண்டவனருளால் தானாகவே அதுவரும், இப்போது திரிகுணாதீதனாகப்பற்றற்றிருக்கின்றான்- இதுவே முக்குணங்கடந்த நிலை.

மனிதனை மீண்டும் மீண்டும் உயர்த்தி மேன்மேலும் மண்ணுலகில் விண்ணுலகை விளக்கவே அவதார புருஷர்கள் அடிக்கடி இங்கு வருகின்றனர். இந்த வேலை முடிவுற்று நமது காரியம் நிறைவேற வேண்டும். இங்கு இந்த ஜடவுலகிலும் அனைவரும் சச்சிதானந்த சித்திபெறவேண்டும். இதுவே அரவிந்த யோக விளக்கமாகும்.

## ஸ்ரீ அரவிந்தரின் ஆவேசமொழிகள்

தாயை மதியாச் சேயில்லை; மகான்களின் பெருமை மாதாப்பெருமையே; நாம் தாயிடம் செல்வோம்; அவளே நமது புகல்; அவளே நமது கதிமோட்சம்;, இந்தியா நமது தாய்; சக்தி; அவளை இதயத்தில் வணங்குவோம்; அவளை அன்பு செய்வோம்; நமது தாய் நிலத்தைத் தொட்டால், அதன் காற்றை நுகர்ந்தால், அதன் ஆற்றிசை கேட்டால் அதன் மலைவனக்காட்சிகளைக் கண்டால், நமது உள்ளம் சிலிர்க்கிறது; அதன் ஆத்ம ஞான பெருமை அளவற்றது அன்னை வடிவாக நிற்கும் ஆண்டவனே நமது புண்ணிய பூமி, இந்தியா எதை இழந்தாலும் தனது ஆத்மாவை இழக்கவில்லை; கடவுள் நமது நாட்டைக் கைவிடவில்லை; அதில் இன்னும் ஞானசூரியன் விளங்குகிறான்.

இப்போது எழுந்த சுதந்தரக் கிளர்ச்சி அரசியல் இயக்கமன்று; அஃது ஆத்மீக இயக்கம்; அரசியல், பொருளாதார விடுதலை மட்டுமன்று, அகில உலகின் அத்யாத்ம வாழ்வே அதன் நோககம்; ஆத்ம சக்தியே நமது தேசியத்தின் அடிப்படை, சர்வாத்ம உணர்ச்சியில் அதன் பொது வாழ்வு விளங்கும். அந்த வாழ்வில் போட்டி, பொறாமை கொடுமை, முதலாளி, பாட்டாளிப போர எதுவுமிராது சுதந்திர பாரதம் சுவர்க்கராச்சியமாக, அருளாட்சியாக விளங்கும், மனிதனில் கடவுளை விளக்குவதே, நரனில் நாரணனைத் துலக்குவதே அதன் இலட்சியம். வெறும் அரசியல் கிளர்ச்சியை மிருகபலம் நசுக்கலாம்; ஆனால் ஆத்மபலங்கொண்ட இயக்கத்தை யாரும் நசுக்கமுடியாது இந்த ஆத்மசக்தியே நமக்கு உறுதி, மற்றெந்நாடுகளுக்கும் இல்லாத இந்த ஆத்மபலமே அற்புதம் செய்யப்போகிறது ஆத்மா கட்டற்றது; எங்குமுள்ளது; எல்லாமானது; அதுவே ஒருமையின் உயிர்.

ஆத்ம சுதந்திரம் ஒவ்வொருவர் உரிமையும் தருமமுமாகும்; அஃதிருந்தால் போட்டி. பொறாமை, வம்பு, வசை அச்சம், பொய், அவநம்பிக்கை, அலட்சியம் மமதையின்றி ஒருவரையொருவர் மதித்துக்கௌரவமாக வாழலாம். இரு

297ம் பக்கம் பார்க்கவும்

# அரவிந்த யோகம்

—[ஆசிரியர்]—

நாம் பயிலும் யோகம் நமக்கு மட்டுமன்று; அது மனித ஜாதிக்கேயாம், மனித ஜாதியின் விடுதலையே அதன் நோக்கம், நமது சத்திய யுகத்தை அதாவது மகாத்மா காந்தியடிகள் கூறிய இராமராச்சியத்தை உலகிற் கொண்டுவருவதே அதன் முயற்சி, தனியாக நமக்கு மோட்சம் தேவையில்லை; ஏனெனில் ஆத்மா நித்திய முக்தன். மனித சமூகம் விடுதலையடைய வேண்டும். இப்பரந்த நோக்கு இல்லாமையினாலேயே உலகில் பலவித விவகாரங்கள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. எனது என்பது புகுந்த உடனே மனம் குறுகிவிடுகின்றது. குறுக்கு வழியே பாய்கின்றது.

நாம் உண்மையிலே பந்தமுறவில்லை; ஆண்டவன் விரும்பும்போது நாம் விடுபடலாம். அவனே நமது பரமாத்மா அவனுடைய அருளும் ஆணையுமின்றி எந்த ஜீவனும் ஆடலை நீங்க முடியாது மடமை இன்ப துன்பம், சுகதுக்கம், புண்ணிய பாவம் ஆகிய தொந்தங்களின் அநுபவத்தை நமது மனத்தினூடு புகுத்துவது பெரும் பாலும் நம்முள் விளங்கும் ஆண்டவனிச்சையே, நிகழ்வன எல்லாம் ஆண்டவன் ஆடல்; இவ்வுண்மை அறிந்தவனே அறிவாளி. நரனிடமுள்ள நாராயணனைப் பொலிவிக்க அவன் விரும்பினால் மாத்திரமே இயலும், வேதங்கள், உப-நிடதங்கள், மற்றைப் புனிதநூல்கள், உலகின் சிக்கலான ஐதீகங்களில் சிலதுணுக்குகள் இவையே நமக்கு எஞ்சியுள்ளன, முன்னேற்றம் தொடங்கும் காலம் வந்து விட்டது, அழிவுப்பாதை விரிந்து சென்றாலும் அவற்றினூடே புதிய ஒற்றுமையை பூரணத்தை நாட்ட வேண்டிய முயற்சிக்கு ஆரம்ப காலம் வந்து விட்டது. அதனாலேதான் மனிதசமூகம் அறிவு, மதம், நீதிநெறிகளை நிறைவுறுத்த எங்கும்

ஓம்

# நல்லுரை.

அன்பொடு உன்னைவர வேற்றவர்தமை,-நீ
ஆர்வ மொடுவணங்கிப் போற்றிடு தம்பீ!
தண்புனல் தந்துதாகம் போக்கி யவர்க்கு,-நீ
தக்கவிருந் தொருவேளை வைத்திடல் நன்று.

தயவுடன் காசுஒன்று தந்தவருக்கு,-நீ
தயங்காமல் பவுன்ஒன்று நல்கிட வேண்டும்;
பயன்கரு தாதுயிரைக் காத்த வருக்கு,-நீ
பதிலுக் குயிர்கொடுக்கப் பார்த்திட வேண்டும்!

பேதமையில், மற்றொருவர் தீங்கு விளைத்தால்,—
அதற்குப்
பெரியோர் பதில்நலமே அளித்திடு வார்;
தீதுக்குப் பதில். தீது செய்தல் மறந்து,-நன்மை
செய்வதில்தான் அவரின்பம் எய்தி மகிழ்வார்!

இத்தகு, நல் வாக்குகளை ஏற்றுநடப் போர்-
நலம்
எத்தனையோ பன்மடங்கு எய்திக் களிப்பார்;
உத்தமர்தம் லட்சணங்கள் இவைமட்டு மா?—
மக்கள்
ஒருகுலம் என்றுணர்ந்தே ஒழுகிடு வார்!

''பரமஹம்ஸ தாசன்''

(காந்தியடிகளுக்குப் பிடித்தமான குஜராத்திப்பாடல் ஒன்றின் கருத்தைத் தழுவியது.)

எல்ல ஒளியே மடமையல்ல அறிவே, அசுத்தமல்ல சுத்தமே நம் உண்மை, கூட்டங்களில் கட்சிப்போர் புரிவதன்று; ஜனங்களிடையே சேவை செய்து, அவருள் மறைந்த வீரதீர ஞானசக்திகளை எழுப்புவதே நமது வேலை. இராச தந்திரத்தாலே ஒரு சமுதாயம முன்னேறிவிடாது. தியாகமுந் தொண்டும் வேண்டும்.

சாத்வீக எதிர்ப்பே நமது வழி; அதன் பால் வரும் இடர்களைத் தீர்க்க புத்தியுடன் நாம் பொறுத்தே முன்னேற வேண்டும். தேசத்துயரை நமது துயராக நினைக்கவேண்டும் நாட்டுநன்மை நமது உள்ளத்தைத் தொடவேண்டும். நமது கடமைகளைக் கடவுட் பணிகளாகச் செய்யவேண்டும், நாட்டில் தியாக புத்தியை வளர்க்கவேண்டும். கட்சிப் பொருமைகளும் சுயநலங்களும் ஒழியவேண்டும், தனது மெழுகுதிரிவிளையாக, சூரியனையே அணைக்க முயன்ற வியாபாரிபோலிருக்கக்கூடாது. நமது பெயர் பிரசித்தமாக வேண்டுமென்று கூடக் கருதக்கூடாது. சுதேசியம் தெய்வ சம்மதம்பெற்ற மகத்தான கருமயக்ஞம், அதை யாரும் தடுக்கமுடியாது, அந்த மகாயக்ஞத்தில் நாமும நம்மாலான கைங்கரியங்களைச் செய்தோம் என்னும்திருப்தியே போதும.

உண்மையான தேசபக்தன் நாட்டிற்கே உயிர்க்கிருன் நாட்டிற்கே உயிர்தருகிருன், பேர் புகழுக்கு அவன் ஆசைப்படுவதில்லை, மாதாகைங்கரியத்தை அவன் கூலிக்குச் செய்வதில்லை, ஆத்ம சமர்ப்பணத்துடன், தியாக புத்தியுடன் மாதா சேவை செய்யுங்கள், பற்றனைத்தையும் அவளிடம் சேர்த்து அவளிச்சைக்கு விட்டுவிடுங்கள் அவளுடைய ஆத்மசக்திக் காந்தம் நம்மை ஐக்கியமாக்கும், அஃது அற்புதம் செய்யுமு கவலை வேண்டாம், கடவுள நம்மை நடத்துவார்; மாதாபலந்தருவாள் அச்சம் வேண்டாம்.



# நான் புசித்த ஞானப் பழம்.

[பிரமச்சாரி ஓங்கார சைதன்யர்]

—※—

(சென்ற மாதச் சுடரில் முகப்புப்படமாக வந்த ஞானனந்த சுவாமிகளை அன்பர் ஒருவர் தரிசித்த செய்தி இக்கட்டுரையில் வெளி வருகிறது)

நன்கு முற்றி-முதிர்ந்து கனிந்த பழம், தேடக்கிடையாத திருப்பழம், பெரு ஞானப் பழம் ஒன்றினைக் கண்டேன்—அதனை உண்டேன். உண்ட பழத்தின் சிறப்பை உங்களுக்கும் சிறிது விளக்க விழைந்தேன்.

இராமலிங்க சுவாமிகளின் மறு அவதாரமோ என்று மகிழ்ந்து கொண்டாடும் தோற்றத்தோடு கண்டேன் அப்பழத்தை-உண்டேன் என் மனத்திரையின் இருள் அகல, அந்த ஞானப்பழத்தைப் பற்றி —அப்பழத்தை யான் புசிக்க கிடைத்த முறையை. தருணத்தைப் பற்றி சிறிது ஈண்டுக் கூற விரும்புகின்றேன்.

பிறவூர் எங்கிருந்தும் இருக்குமதி செய்யப்படாத மரத்திலோ கொடியிலோ. காய்க்காது பரப்பிரம்மத்தில் காய்த்து ஆத்மீக சாதனையினுல் பறிக்கப்பட்டு உலகபந்தங்களினுல் பீடிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்கு அருமருந்தாகும் இப்பழத்தை நீங்களும் அறிய வேண்டாமா? உலக மாய சந்தையில் தேடியடைய வேண்டிய அருமருந்தன்ன பழம் இது. உருவத்திலோ அன்றி குணத்திலோ அன்றி சுவையிலோ ஒத்ததன்று இப்பழம். பரந்தவுலகிலே ஆத்மீக ஞான ஒளி வீசும் பாரத புண்ணிய நாட்டிலே தான் இத்தகைய பெருமை பொருந்திய பழங்கள்-ஞானப்பழங்கள்-நான் புசித்த பழங்கள் கிடைக்கும். அப்படி எமக்குண்பதற்குக் கிடைத்த ஓர் அரிய ஞானப் பழத்தைப் பற்றி ஈண்டு எடுத்தோத விழைகின்றேன்.

கடந்த ஆண்டிலே இந்திய நாட்டுக்குச் சுற்றுப் பிரயாணஞ் செய்யும் நோக்கோடு யான் சென்றிருந்தேன். பல்வேறு தலங்களிலும் இடங்களிலும் ஞானக்கனிகளைக் கண்டேன் உண்டேன். வட இந்தியாவிலே ரிஷிகேசத்தில் சிவானந்த ஆச்சிரமத்திலே உண்ண உண்ணத் தெவிட்டாத ஓர் அருங்கனியை உண்டேன். அக்கனியின் சுவை-என்னை அங்கு மூன்று மாத காலங்களுக்கு தங்க வைத்து விட்டது. உலகின் நாலு பாகங்களிலிருந்தும் அக்கனியைப் புசிப்பதற்கு வரும் மக்களின் எண்ணிக்கை கூறுந்தரமன்றுயின் என்னிலை பற்றி ஏன் கூறுதும்?

சுவைத்த கனியின்-அக்கனிதந்த களிப்பின் மிகுதியால் தொடர்ந்து சில ஆண்டுகள் அங்கு வதிய விருப்பிருந்தும் அதற்காய அவகாசம் இன்மை காரணமாக அந்த ஞானப்பழத்திடம் விடைபெற்று இலங்கை திரும்பினேன். வரும்வழியிலே, சென்னை மாநகரடைந்தபோது எமது குருநாதர் கூறிய பிறிதோர் பழத்தின் ஞாபகம் அகத்தில் தோன்றியது.

தில்லைச்சிதம்பரத்திருக்கூத்தன் தரிசனத்துக்கும் செல்வதற்குத் திட்டமிருந்தது. அதற்கிடையில் குருநாதர் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தா அவர்கள். சென்னைக்கணித்தாக இருக்கும் ஞானப்பழத்தைப்பற்றிக் கூறியிருந்த செய்தி ஞாபகத்துக்கு வந்து விட்டது. ஆகவே, தில்லைத் திருக்கூத்தனிடம் செல்லும் போது இடையிலிறங்கி குருநாதர் கூறிய இப்பழத்தையும் புசித்து விடவேண்டும் என்று திட்டமிட்டுக்கொண்டேன். திட்டம் செயல்பட்டது.

விழுப்புரம் புகைவண்டித்தானத்திலே இறங்கினேன். பொருட்களை நிலையத்திலே ஒப்படைத்து விட்டு திருக்கோவலூருக்கு மோட்டார் வண்டியில் புறப்பட்டேன். அப்பழத்தை புசித்து விட்டு அடுத்த மணித்தியாலமே திரும்பி வந்து தில்லைச்சிதம்பர பயணத்தை தொடர்வதாகத் திட்டம் ஆனால், அத்திட்டம் நிறைவேறிற்றா? அதுதான் கிடையாது. சென்றேன் - கண்டேன்-புசித்தேன். அப்பழத்தின் சுவையில் மயங்கிவிட்டேன்.

மோட்டார்வண்டி தூரத்திலே வரும்போதே திருக்கோவலூர் ஆலயத்தின் உயர்ந்த கோபுரம் கண்களுக்குத் தோன்றியது. பழம் கிட்டிவிட்டதாகப் பெருமகிழ்வு ஏற்பட்டது. சுலபத்திற் கிட்டுமா?

வண்டியும் கோயிலை அடைந்து அண்மையில் நின்றது. மிகவும் பழைய கோயில்! பெண்ணையாற்றின் தென்கரையிலுள்ளது. இதற்கெதிரில் வடகரையில் அறையணி நல்லூர் இருக்கிறது. இச்சந்நிதி மேற்குப் பார்த்தது. அஷ்ட வீரத்தில் ஒன்று. அந்தகாசுரனைச் சங்கரித்தருளிய தலம். மெய்ப்பொருள் நாயனாருடைய திருப்பதி. இவ்வூர் ''மேலூர்'' ''கீழூர்'' என்று இரண்டு பாகங்களாயிருக்கிறது. சிவாலயம் கீழூரில் உள்ளது. அம்மன் கோயில் பிரத்தியேகமாயிருக்கிறது. இதற்குத் தென்மேற்கிலுள்ள மேலூரில் உலகளந்த பெருமான் கோயில் இருக்கிறது. ஒருவாறாக ஆலயதரிசனத்தையும் இங்கு முடித்துக்கொண்டு தரிசிக்க வந்த ஞானப்பழத்தை தேடலாயினேன்.

வீரட்டேசுரப் பெருமானதும். சிவானந்தவல்லி தேவியாரதும் உலகளந்தாரதும் தரிசனம் முடிந்து ஆலயத்தை விட்டு வெளியே வந்ததும், ஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் எங்கேயிருக்கிறார்? அவரது தபோவனம் எங்குளது? என்றெல்லாம் விசாரித்தேன். ஆம் நான் தேடவந்த ஞானப்பழம் அம்மகான் ஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் தான். பக்கத்திலிருந்த பெண்ணை ஆற்றைத் தாண்டி மறுகரையிலிருக்கும் வீதிவழியே சுமார் இரண்டு மைல்கள் சென்றால் வலது புறமாக ஞானானந்த தபோவனம் இருப்பதாக பக்கத்திலிருந்த ஒருவர் எடுத்துரைத்தார். ஆற்றைக் கடக்க அதில் இறங்கித்தான் ஆகவேண்டும். ஆனால் ஆழமறியாது அதிலே காலைவிடலாமா? நாற்புறத்திற்கும் பார்வையை ஓட்டினேன். ஆற்றில் இரு மருங்கி



லும் மக்கள் குளித்துக்கொண்டிருப்பதையும் ஆற்றில் சிலர் இறங்கி நடப்பதையும் கண்டேன். நானும் துணிந்து ஆற்றில் இறங்கி மறுகரையை நோக்கி நடந்தேன்.

சுமார் 200 யார் தூரமான அந்த இடையைக் கடந்து மறுகரையிலுள்ள வீதியை அடைந்தேன் அவ்வீதிவழி நடக்கும் போது நடுக்காட்டில் தபோவனக் கட்டடம் தெரிந்தது. அதனைச் சமீபித்ததும் முகப்பிலே ''ஞானானந்த தபோவனம்'' என எழுதப்பட்ட பலகை தொங்குவதைக் கண்டேன். உள்ளே சென்றேன். ஆண்டிருந்த ஆலயத்திலே ஒருவர் பூஜை செய்து கொண்டிருந்தார். சுவாமிகள் எங்குளர் என அவரிடம் உசாவினேன். இத்தபோவனத்திற்கு ஏழு மைல்களுக்கப்பாலுள்ள ''சித்திலிங்கமடம்'' என்னும் இடத்திலே சுவாமியாரவர்கள் இருப்பதாகவும் அவர் இரு இடங்களிலும் மாறி மாறித் தங்குவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

இத்தகைய மகான்களின் தரிசனம் இலகுவில் கிடைக்கக்கூடியதா? என்மனதிற்கு யானே தேற்றங்கூறியவாறு மீண்டும் ஆற்றினைக் கடந்து மோட்டார் வண்டிகள் நிலையத்துக்கு காலை ஒன்பது மணியளவில் வந்து சேர்ந்தேன். சித்திலிங்கமடம் செல்லக்கூடிய அடுத்த வண்டி பகல் ஒரு மணிக்குத்தான் அங்கிருந்து புறப்படுமென்று கூறினார்கள். ஆனால் ஆண்டிருந்த ஒருவர், சித்திலிங்கமடம் ஆகக்கூடி ஏழு மைல்கள் தானே? ஆடி ஆடி நடந்தாலும் பகல் சாப்பாட்டிற்கு போய் விடலாம். என்றுரைத்தார். மதிப்பிற்குரிய இந்த ஞானப் பழத்தை சுலபத்திலே பெற உண்ணமுடியாதென எண்ணிக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன். பெண்ணையாற்றின் ஓரமாகவே பாதை போய்க்கொண்டிருந்தமையால் இயற்கையின் எழிலை பருகியவாறு நடந்துகொண்டேயிருந்தேன். சாதாரணமாக இப்பகற்போதின் வெய்யிலை தாங்கிக் கொள்ளமுடியாது வியர்வை ஒருபுறம் பெருகிக் கொண்டிருந்தது. வெப்பம் ஒருபுறம் வாட்டியது. ஆனால் பெண்ணைத் தாயின் மருங்கில் வீசிய காற்றும் சூழலில் இருந்த இயற்கையழகும் எல்லாத்துன்பங்களையும் போக்கி விட்டது. இவ்வாறாகவே ஆண்டவனை அடையக்கூடிய ஆத்மீகத்துறையில் செல்பவர்களுக்கும் வழியில் பல கஷ்டங்களும், துன்பங்களும். ஏமாற்றங்களும் ஏற்படுகின்றன. அவைகளையெல்லாம் வைராக்கியத்துடன் சகித்துக்கொண்டு செல்பவர்கள் கடைசியில் அவனை அடைகின்றார்கள் என்பதற்கு இவ்வனுபவம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பகல் பன்னிரண்டு மணிக்கு முன்னதாக சித்திலிங்கமடத்துக்கு வந்து சேர்ந்து விட்டேன். பெருவீதியிலிருந்து கிராமத்துக்குச் செல்லும் பாதையைக் காட்டி, இப்பாதை வழிச் சென்றால் சுவாமிகள் வசிக்கும் ஆச்சிரமத்தை அடையலாம், என்று ஒருவர்

கூறினார். அவ்வாறே சென்றேன். அங்குள்ள - ஓர் புராதன காலத்துக் கோயில் ஒன்று எதிரில் காட்சியளித்தது. ஆலயத்தின் வாயிலுக்குச் சமீபத்தில் வைக்கோலினால் வேயப்பட்டிருந்த குடிசை ஒன்றைச் சுட்டிக் காட்டி "இது தான் சுவாமிகள் வசிக்கும்குடிசை'' என்றும் அதன் பக்கத்தில் உள்ளது பஜனைமண்டபம் என்றும் ஒருவர் கூறினார். உள்ளே சென்றேன். ஐந்து அன்பர்கள் வாயிலில் நின்றனர். அவர்களிடம் சுவாமிகள் எங்கிருக்கிறார். என்றுகேட்டேன், ''நாங்களும் அதிகதூரத்திலிருந்தும் வந்து சுவாமிகளின் தரிசனத்துக்காகவே காத்துக்கொண்டிருக்கின்றோம்'' என்று அவர்களும் கூறினர். அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களைக் கேட்டபோது ''சுவாமிகள் உள்ளேயிருக்கின்றார். எப்பொழுது வெளியே வருவாரென்று கூறமுடியாது'' என்றனர். எனக்கோ சுவாமிகளை எப்படியாவது தரிசித்துவிட்டு உடனேயே சென்று அடுத்த வண்டியில் சிதம்பரத்துக்குப் புறப்படவேண்டும் என்ற அவசரம் என்ன செய்வதென்று தெரியாது சிந்தித்துக் கொண்டிருந்தேன். இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தும் சுவாமிகளைத் தரிசிக்கமுடியாமலிருக்கின்றதே என்னும் வருத்தம் ஒருபுறம் அடுத்த பிரயாணத்திற்கு நேரத்தோடு செல்லமுடியாதவாறு தாமத மேற்படுகிறதே என்னும் சிந்தனை ஒருபுறம் என்னை வாட்டிநின்றன இப்படி யான் சிந்தனையில் மூழ்கியிருக்கும்போது ஆண்டிருந்தோரெல்லோரும் பரபரப்புடன் எழுந்தனர். பழத்தின் அருள்மனம் கமகமமென்று வீசியது. திரும்பிப்பார்த்தேன் சுவாமிகள் வெளியே வந்துகொண்டிருந்தார்.

இராமலிங்கவள்ளலார்தான் வருகின்றாரா? என்று என் மனம் ஐயத்தினால் பீடிக்கப்பட்டது. வள்ளலார் போன்றே உடையும் அணிந்திருந்தார். சாதாரண உயரம், சற்றுப் பருத்த உடல், தழதழ வென்று ஒளிவீசும் மேனியழகு, பூரணைச்சந்திரன் போல பிரகாசமும் தண்ணளியுங்கொண்ட முகம். முழந்தையின் சுபாவம். தில்லைக் திருக்கூத்தனின் திருக்காட்சி இங்கேயே கிடைத்து விட்டது என்பதை அப்போது அறிந்திலேன். அவரைப்பார்த்தேன் பார்த்ததுமே மின்சாரம்போன்று அச்சக்தி, அந்தஞானஒளி என்னைத் தன்பால் ஈர்த்துவிட்டது. பஹவானையே நேரில் தரிசித்தது போன்ற ஆனந்தம் உள்ளத்தே பெருகியது. அப்படியே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினேன். தாய் தன் குழந்தையை மகிழ்ச்சியோடு அள்ளியணைப்பது போன்று, என்னை ஆதரவாக அணைத்து "இப்போதுதான் வந்தீரா'' என்று குழந்தையின் வருகையை எதிர்பார்த்திருந்த அன்னையைப்போல அன்பொழுகக் கேட்டார். ''ஆம் ஐந்து நிமிடங்கள்தான் இருக்கும்'' எனப் பகர்ந்தேன். ஆண்டுக் குழுமியிருந்தோரெல்லோரையும் அவரவர் வந்த நேரங்களை குறிப்பிட்டு உசாவி, அவர்களை வரவேற்றபின்னர் எல்லோரையும் அழைத்துக் கொண்டு பஜனை மண்டபம் சென்றார்.



யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் சுகநலங்களை விசாரித்த பின்னர் எனது யாத்திரை யனுபவங்களை விசாரித்தார். எல்லாவற்றையும் சுருக்கமாக எடுத்துரைத்துவிட்டு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் தூர கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் செல்வதற்கிருப்பதால் இலங்கைக்கு நான் உடனடியாகத் திரும்புவதாகத்தெரிவித்தேன். இந்நேரத்தில் அங்கு குழுமியிருந்தோர் தொகை மிக அதிகரித்து விட்டது. சுவாமிகள் அங்கு வந்திருந்த ஒருவரை பார்த்து ''என்னப்பா, ஏன் வந்தாய்?'' எனக்கேட்டார். எனது சுற்றத்தவர் ஒருவருக்கு உயிர் பிரியும் தறுவாய் அவரோ எங்கட்கெல்லாம் மிக மிக வேண்டப்பட்டவர். எல்லா மருந்துகளும் கொடுத்தும் பயன் காணோம். தங்களிடம் எங்கள் கஷ்டத்தைக் கூறி முறையிட வந்தேன். என அவர் கூறினார்.

அப்படியா? போகின்ற உயிரை பிடித்து உம்மால் நிறுத்த முடியுமா? அப்படியானாலும் எவ்வளவு காலத்துக்கு உம்மால் முடியும்? எவ்வளவு பலமாக பிடித்தாலும் ஒரு நாளைக்கு போகத் தானே செய்யும். கஷ்டங்கள் நிவர்த்தியாக ஆண்டவனை வணங்கிக்கொள்க, சரி, போய் நாளை வருக. என்று சுவாமிகள் கூறி விட்டு மற்ற பக்தகோடிகள் பக்கம் திரும்பினார்.

சுவாமிகள்முன்பாகவிருந்த ஒரு சிறியநாற்காலியில் பழங்களும். தேங்காய், கற்பூரம், கற்கண்டு, பத்தி, ஆகிய பொருள்களும் குவிந்துவிட்டன. சுவாமிகள் அங்கு நின்ற ஓர் அன்னையை பார்த்து ''சரோஜினி! இன்று விருந்தினர் யாரும் வரவில்லையே என்று கூறினாயே இந்த நால்வரையும் அழைத்துச் சென்று சாப்பிடச் செய்'' என்று என்னையும் மற்றும் மூவரையும் சுட்டினார். நானோ பகல் எதுவும் சாப்பிடவில்லை. காலையில் சிற்றுண்டி மட்டுமே அருந்தியிருந்தேன். ஆனாலும், நான் சாப்பிட்டு விட்டதாக சுவாமிகளிடம் தெரிவித்தேன். விட்டாரா சுவாமிகள் ''என்ன சிற்றுண்டி தானே சாப்பிட்டிருப்பீர். பகல் உணவருந்துவதற்கு இடையில் அவகாசமே இருந்திருக்காதே!'' என்றெல்லாம் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்துவிட்டார். குறுக்கு விசாரணையினால் உண்மையை அறிந்து கொள்ளலாம் என்று கூறிவிட்டு என்னைச் சென்று உணவருந்தும்படி பணித்தார், ஏனைய அன்பர்களுடன் யானும் சாப்பிடச் சென்றேன். ஆங்கு உணவு எங்களுக்காகக்காத்திருந்தது எங்களுக்கு உணவளித்த அம்மையாரிடம் ''என்ன அம்மா! எங்களால் உங்களுக்கு எவ்வளவு கிரமம், எந்நாளும் தங்களுக்கு இவ்வாறுதான் இருக்கும்போலும்'' என்று கூறினேன்.'' அப்படி ஏன் கூறுகின்றீர்கள். நாங்களும் உங்களைப்போன்று சுவாமி தரிசனத்துக்காக அதிகத்தூரத்திலிருந்து வந்தவர்கள்தான் சுவாமியைத் தரிசிக்கவரும் அன்பர்களுக்குப் பணிபுரிவதற்காகவே இங்குச்சில

தினங்கள் தங்கியிருக்கின்றோம். சுவாமிகளைவிட நிரந்தரமாக இங்கு வசிப்பவர்கள் யாருமில்லை. நாங்களும் வந்த சமயத்திலே சாமியாருடன் வசிப்பவர் போன்றும் உரிமையாளர் போன்றும் பலர் இருந்தனர். ஆனால், இரண்டு நாட்களின் பின்னர். அவர்கள் இங்குள்ள வேலைகளையெல்லாம் எங்களிடம் ஒப்படைத்து விட்டு அரிசி. பருப்பு முதலிய பொருள்கள் இருக்குமிடங்களையெல்லாம் எங்களுக்குக் காட்டினர். எதற்காக இப்படிச் செய்கிறீர்களெனக்கேட்டபோது தாங்கள் மறுநாள் பயணஞ்செல்வதாக தெரிவித்தனர். அதன் பின்புதான் உண்மையை நாங்கள் உணர்ந்து கொண்டோம் இப்படியாகவே இத்தபோவனம் தினமும் கலியாணவீடு போன்று சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றது. வந்து நிற்பவர்கள் திரும்புவதற்குள் எப்படியும் இன்னும் சிலர் வந்து இவ்வேலைகளை ஏற்றுக்கொண்டுவிடுகின்றனர். சுவாமிகளை கவனிப்பதற்கோ அவருக்கு உணவு தயாரித்துக்கொடுப்பதற்கோ இங்கு யாருமில்லை. வருபவர்கள்தான் உணவைச் சமைத்து சுவாமிகளுக்குங் கொடுத்து தாமும் உண்டு செல்கின்றனர். வருபவர்களுக்கெல்லாம் இது சொந்த வீடு போன்றது. சுவாமிகளுக்கு இககுடிசையையும் பஜனை மண்டபம், சமையல் அறை, கிணறு ஆகியவற்றையும் யாரோ தர்மசீலர் கட்டி தேவையான பாத்திரங்கள் போன்ற பாவிப்புக்குரிய சாமான்களையும் உதவிச் சென்றுள்ளர். அவரருளால் இந்த ஸ்தாபனம் சொந்தமாக யாருமில்லாமலும், நிரந்தர பொருள் வருமானமேதுமில்லாமலும் பொதுமக்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று செவ்வனே நடைபெற்று வருகின்றன என்று பதிலளித்தார் அந்த அம்மை.

பகல் உணவு உட்கொண்டதும் சற்றும் தாமதமின்றி சுவாமிகள் இருந்த பஜனை மண்டபத்துக்கே சென்றேன். அங்கு குழுமியிருந்தவர்களுடன் சுவாமிகள் உரையாடிக்கொண்டிருந்தார் உரையாடலென்றால் சதாரணமான பேச்சல்ல ஞானோபதேசமே. தமக்கு முன்பாக இருந்த கனிகளையும் ஏனைய பிரசாதங்களையும் குழுமியிருந்த பக்தர்களுக்கெல்லாம் கொடுத்துக்கொண்டே இருந்தார். இவற்றினை சுவாமிகள் வழங்கிய விதமே அவர்களுக்கு ஞானோபதேசம் செய்வது போன்றிருந்தது. ஒருவரிடம் ஒரு பழத்தைக் கொடுத்து போய் வரும்படி கூறினார். சிலரிடம் இரு பழங்களைக் கொடுத்து இவ்வாறே நீ வாழ்ந்து கொள் என்று கூறி அனுப்பினார் இன்னும் சிலருக்கு இரண்டுக்கு மேற்பட்ட பழங்களையும் கொடுத்தார். சிலருக்குப் பூ மட்டும்தான். இன்னும் சிலருக்குக் கற்கண்டு த்துண்டுகளும், பொட்டணங்களும், வேறு சிலருக்கு ஒன்றுமே கொடுக்காது போய் வரும்படி கூறினார். சிலருக்கு கையில் ஒன்றும் கொடுக்காது வாயால் சில வார்த்தைகளை மட்டும் கூறியனுப்பினார். சிலர் கேட்டாலும் கொடுக்கமாட்டார். இவவாறெல்லாம் அவரது ஒவ்வொரு செயலும் அதைப் பெறுவோரது அப்போதைய மனோநிலைக்கேற்ப அவர்களுக்குச் சிறந்த உபதேசமாகவே இருந்தது. விரித்துக்கூற முனைந்தால் அதுவே 'ஞானோபதேசம்'' என்று ஒரு புஸ்தகமாக ஆகிவிடும். எப்படியாகிலும் இன்னும் ஒன்றை மட்டும் இவ்விடத்தில் கூறித்தர்ன் ஆகவேண்டியிருக்கின்றது. சிறியோர்கள் விடும் பிழைகளைப் பெரியோர்கள் அவர்களுக்கு எப்படி உணரச் செய்கின்றார் பாருங்கள் இவைகள் நடந்து கொண்டிருக்கும் போது இடையில் சுவாமிகள் தூரத்தில் சென்றுகொண்டிருந்த, எங்கட்கு உணவூட்டிய அம்மையாரைப் பார்த்து ,சரோஜினி! உனக்குக் கொண்டைக்குப் பூ வேண்டுமா? இதோ என்று ஒரு சரமாலையை எடுத்து நீட்டினார். அந்த அம்மையாரும் மகிழ்வுடன் பூவைப் பெற்று, கொண்டையில் வைப்பதற்காக முனைந்தாள். தான் தலை வார்ந்தபோது சீப்பையும் கொண்டையிலேயே வைத்துவிட்டதை அப்போதுதான் அவர் அறிந்து கொண்டார் வெட்கமடைந்தவராகச் சுவாமிகளிடம் மன்னிப்பு வேண்டிக்கொண்டார். சுவாமிகளும் புன்முறுவலுடன் தலையை அசைத்தார்.



இவ்வாறு பலதும் நடைபெற்றுமுடிய மாலை நான்கு மணியாகிவிட்டது. ஒரு பஜனைக் கோஷ்டியினர் தங்களது வாத்தியங்கள் சகிதமாக வந்து சேர்ந்தார்கள். உடனே உரையாடல் நின்றுவிட்டது. பஜனை ஆரம்பமாகியது. எல்லோரும் பாடினர். சுவாமிகளோ அப்பாடல்கள் சிலவற்றின் விசேட கருத்துக்களை குழுமியிருந்த அன்பர்களுக்கு விளக்கிக்கொண்டிருந்தார். இரவு 9 மணியளவில் பஜனை முடிவுற்றதும் எல்லாரும் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு தத்தம் இடங்களுக்குத் திரும்பினர். யானும் இரவு உணவை ஆண்டு முடித்துக்கொண்டு சுவாமிகள் அன்போடு உதவிய போர்வையைபெற்று ஆங்கொருபால் படுத்துறங்கலாயினேன் உடன் புறப்படுவதாக வந்த யான் இஞ்ஞானப்பழத்தின் அருள் மனத்துக்கு-அன்புக்குக் கட்டுப்பட்டு விட்டேன்.

காலை மணி மூன்றிருக்கும். களைப்பின் மிகுதியால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தேன். அச்சமயத்தில் ''ஞானாநந்த சுவாமிகளுக்கு ஜே! குருஜீக்கு ஜே! என்ற கோஷம் செவியைப் பிளந்தது அவசரவசரமாக வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்து வாயிலை நோக்கினேன். ஒரு காரிலிருந்து இரு அன்பர்கள் இறங்கி சுவாமிகளுடைய இடத்தை நோக்கிச் செல்வதைக் கண்டேன். தாங்கள் வருவதாக எவ்வித முன்னறிவித்தலையும் அவர்கள் கொடுத்திருக்கவில்லை. ஆனாலும்அவர்கள் வருவார்கள் என்பதும். இந்த நேரத்

துக்குத்தான் வருவார்கள் என்பதும் சுவாமியவர்களுக்குத் தெரியும் போலும் அன்றிரவு இரண்டு மணிக்கே நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, ஸ்நானமும் செய்துவிட்டு அவர்களது வருகைக்காக காத்துக்கொண்டிருந்தார். வந்த இரு அன்பர்களில் ஒருவரான திரு: சுந்தர சர்மா அவர்கள் சுவாமிகளது சிறந்த பக்தர். இந்திய அரசாங்கத்திலே மதுரை ஜில்லாவில் சுப்பிரின்டன்டாக கடமையாற்றுபவர் சுவாமிகளது 146வது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக 180 மைல்களுக்கு அப்பாலுள்ள மதுரை மாநகரிலிருந்து புறப்பட்டு இரவோடிரவாக பிரயாணஞ் செய்துள்ளார். மறுநாள் தைக்கார்த்திகை நட்சத்திரம் அன்றுதான் சுவாமிகளது பிறந்த தினம்.

நானும்காலைக்கடன்களை முற்றுறமுடித்து சுவாமிகளின் இருப்பிடஞ் சென்று ஆண்டிருந்தோரோடு சேர்ந்து பக்திப்பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தேன். வழக்கம்போல பக்தகோடிகள் சுவாமிகளைத் தரிசிக்க வந்துகொண்டிருந்தனர். போகும் உயிரைப் பிடித்துக் கொள்வதற்காக சுவாமியிடம் முதல் வந்தவரும் வந்தார். ''எப்படியப்பா'' என்று சுவாமிகள் அவரைக் கேட்டார். "இன்னமும் உயிர் போகவில்லை. ஆனால் நேற்றைய நிலையைவிட இன்று சிறிது அபிவிருத்தியுண்டு. நீங்கள்தான் உதவிபுரியவேண்டும்.'' என்றார். ''டாக்டருக்கும்,ஏனைய வைத்தியத்துக்கும்மனமாரக் கையிலிருந்த பணத்தையெல்லாம் வாரியிறைத்துவிட்டு, முடியாத கட்டத்தில் அவர்களெல்லாராலும் முடியாத ஓர் பேருதவியைப் பகவானிடம் பெறவிரும்பிய நீ அரை அணா கற்பூரக்கட்டிக்கூடக் கையில்லாது அவரிடம் செல்வது நியாயமா'' என்று கேட்பது போன்று நான் என்னய்யா செய்ய முடியும் பகவானைத்தான் நன்கு வேண்டிக்கொள். கடைசியில் உயிரைக் காப்பாற்றுவதற்காக சுவாமியிடம் வந்திருக்கின்றாய். சுவாமிக்காக என்ன கொண்டு வந்தாய்? என்று கேட்டார். தான் எதுவுமே கொண்டுவரவில்லையென்று அவர் கூறினார். கல்லுப்பிள்ளையார் போன்று இச்சாமியும் பேசமாட்டாரென்றோ, அல்லது இந்த வயது முதிர்ந்த சாமியார் அவைகளையெல்லாம் சாப்பிடமாட்டாரென்றோ அவர் எண்ணிவிட்டார்போலும்

அப்போது சுவாமிகள் கூறினார்,– இக்காலத்திலே யாரிடமாவது இலவசமாக ஒரு உதவியைப் பெறமுடியுமா? அப்படிப் பெற்றாலும் அதற்குப்பிரதி உபகாரம் செய்யவேண்டியல்லவா இருக்கிறது இதனை இக்காலத்திலே நீர் பார்த்ததில்லையா? அதேபோன்று இறைவனிடமும் ஒரு உதவியைப் பெற வேண்டுமென்றாலும் அதற்



காக ஆண்டவனுக்குப் பிரீதியான கற்பூரம் பாக்கு, பழம், வெற்றிலை போன்றவற்றை அர்ப்பணித்து வழிபாடாற்றி வருந்தி எங்கள் குறைகளை எடுத்துரைத்தல் வேண்டும் இலவசமாக எதுவும் கிடைக்கக்கூடியதல்ல. இன்றுபோய் நாளை வருகவரும்போதுகடவுளுக்குப்பிரியமானவற்றை எடுத்து வந்து அவருக்கு அர்ப்பணித்து வழிபடுகநானும்இறைவனிடம் உனக்காகவேண்டிக்கொளுள்கின்றேன். என்றார், இக்காலத்தில் இது சகஜம் தானே, வருத்தம் மாறினாலும் விட்டாலும் டாக்குத்தருக்குரிய பணத்தை அவர் போம்போதே கொடுத்துவிடுவார்கள். ஆனால் ஆண்டவனிடம் உதவியைப் பெற விரும்புவோர் நீ எனக்கு இவ்வுதவியைச் செய்தால் உனக்குக் கடைசியில் நான் இன்னதெல்லாம் தருவேன், என்று நேத்திக்கடன் செய்துவிடுகின்றார்கள். கடவுள் நன்றி கெட்டவர் உலகத்தினர் மனமிரங்கிக்கொடுக்கும் பொங்கல், பழம். பாக்கு, இவற்றைக்கொண்டுதான் அவர் உயிர்வாழ்கின்றார் என்பது அப்படியானவர்களின் நோக்கம் போலும்,

பிற்பகல் இரண்டு மணியிருக்கும் பொண்டிச்சேரியிலிருந்து ஒரு பஜனைக்கோஷ்டியினர் அங்கு பஜனை நடாத்தி ராதாதிருக்கல்யாணம் செய்வதற்கான ஒழுங்குகளுடன் வந்திருந்தனர். பஜனை மூன்று மணியளவில் ஆரம்பமாயது இதற்கிடையில் மற்றுமோர் பஜனைக் கோஷ்டியினர் பஜனை செய்து முருகன் திருக்கல்யாணம் நடாத்துதற்கு வந்துசேர்ந்தனர். பஜனையே பெரும் ஆரவாரமாகயிற்று. நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தன இரவு பதினொருமணியளவில் எல்லோரும் எழுந்து நின்று, கால்களில் சலங்கைகளனிந்து கொண்டு, குத்துவிளக்கை நடுவே வைத்து அதனைச்சுற்றி ஆடிப்பாடி பஜனை செய்தனர். சற்றுநேரங்கடந்ததும் எல்லோரும் தம்மை மறந்த நிலையில் ஆநந்தக்கூத்தாடினர். அப்போது ஒருவர் ''கோவிந்தா கோவிந்தா''எனக்கூவிக்கொண்டு நிலத்தில் வீழ்ந்து விட்டார். சற்றுநேரங்கழிந்துமீண்டும்அவர்எல்லோருடனும்சேர்ந்து ஆடிப்பாடினார். நேரம் மூன்று மணிக்குமேலாகிவிட்டதால் சுவாமிகளது கட்டாயத்தின்மேல் எல்லோரும் நித்திரைக்குச் சென்றனர்.

காலை விடிந்தது. தைமாத கார்த்திகை சுவாமியவர்களது 146வது பிறந்த நன்னாள் திரு சுந்தரசர்மவோ சுவாமிகளுக்கும் மீனாக்ஷி அம்மையாருக்கும் அபிஷேகம். பூஜை ஆதியன புரிவதற்கான ஒழுங்குகளிசுடுபட்டார். பஜனைக்கோஷ்டியினரோ முருகன் திருக்கல்யாணத்துக்கானஏற்பாடுகளிலீடுபட்டிருந்தனர்ஒன்றன்பின்னொன்றாக ஒவ்வொன்றும் நடைபெற்றன. சுந்தரசர்மா அவர்கள் சுவாமிகளின் பாதங்களுக்குப் பூசை நடத்தினார். ஆண்டவன் பக்தர்களின் அன்புக்குக்

கட்டுப்படுபவன் என்பதை அப்போது அறியக்கூடியதாக இருந்தது. சுவாமிகளும் பக்தர்கூட்டத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டு சில மணித்தியாலங்கள் கல்லுப்போல அப்படியே இருந்துவிட்டார் பக்தர்களின் கொண்டாட்டத்துக்குக் கேட்கவும் வேண்டுமா? சுவாமிகளின் பதாரவிந்தங்களில் பாலைச்சொறிந்தார்கள். பழத்தைச் சொறிந்தார்கள். பூவைக்குவித்தார்கள். மாலை சூட்டினர். அர்ச்சனை செய்தார்கள் அதுமட்டுமல்ல விபூதி மழையும் பொலிந்தது தூப தீபங்கள் காட்டினர். பெண்கள் ஆராத்தி சுற்றி எடுத்தனர். இவ்வாறுக் சுவாமிகட்குப் பாத பூசை செவ்வனே நடைபெற்றது. மறுபுறம் திருக்கல்யாண வைபவமும் சிறப்பாக நடைபெற்றது அதன் பின்னர். எல்லோருக்கும் கல்யாண விருந்து மிகப்பிரமாதமான முறையில் அளிக்கப்பட்டது.

பஜனைக்கோஷ்டியினர் எல்லோரும் இந்திய அரசாங்கத்திலே பெரும் பதவிகள் வகிப்பவர்கள். இவ்விருந்து வைபவங்கள் முடிந்ததும் சுவாமிஜீயிடம் அநுமதி பெற்றுத் தத்தம் இடங்களுக்கு உடனேகினர். மிகுதியாயிருந்தோர் அன்று பிற்பகல் மூன்று மணியளவில் மீண்டும் கூட்டி பஜனையை ஆரம்பித்து நடத்தினர்.

இதனிடையில் தன் உறவினருடைய நலம் நாடி உயிர்ப்பிச்சை கேட்டுவந்தவர் சுவாமிக்கு இரண்டோ மூன்று பழம் பாக்கு, வெற்றிலை, கற்பூரம் ஆதியனவற்றுடன் வந்துசேர்ந்தார். அவர் மட்டும் சிறிய வாழைப்பழங்களை வாங்கிவிடவில்லை. இக்காலத்தில் அனேகர் அவ்வாறே செய்கின்றனர். கோயிலுக்கு வாழைப்பழம் கொண்டு போகவேண்டியிருந்தால். எந்தக்கடையில் ஒரு அங்குல நீளத்துக்கு மேற்படாத நுனிச் சீப்பு கதலி வாழைப்பழம் இருக்கிறதென்று தேடி அலைந்து வாங்குகின்றனர், ஆனால் அவர்களுக்குச் சாப்பிடப் பழம் தேவைப்பட்டாலோ எங்கு கப்பல் வழைப்பழம் இருக்கிறதென்று தேடி அடிச்சீப்பை வெட்டிக்கொண்டு வருகின்றனர். இக்காலத்தைய மக்கள் பலர் கடவுள்மீது வைத்திருக்கும் மதிப்பு எத்தரத்ததென்று சிந்தித்து பாருங்கள்.

"எப்படியப்பா?" என்று சுவாமிகள் அவரைக் கேட்டார். "உயிர்போகவில்லை" என்று கூறிக்கொண்டே பக்கத்தில் உட்கார்ந்துவிட்டார். தாம் கொண்டுவந்த பொருள்களை கடவுளுக்கு வைத்து பூசை செய்து தமது ஆளுக்கு உயிர்ப்பிச்சையை சுவாமிகள் அளிக்கப் போகின்றார். என அவர் எதிர்பார்த்திருந்தார். சுவாமியாரோ அவர்கொண்டுவந்தஒருபொட்டனம்நீங்கலாகமற்ற எல்லாப் பொருள்களையும் அங்கிருந்தவர்களுக்கு ஒவ்வொன்றாக கொடுத்துவிட்டார். வந்திருந்தவருக்கு பெருத்த யோசனையாகிவிட்டது. கற்பூரப் பொட்டணம் தவிர தாம் கொண்டுவந்திருந்த



பொருள்களையெல்லாம் அவைஇன்னின்னவை என்றுபொட்டணங்களைப் பிரித்துப்பாராமலே முறைப்படி சுவாமியார் வழங்கிவிட்டாரே என்று அவர் சிந்திக்கலானார். பொட்டணங்களுள் இருந்தவற்றை இன்னின்ன பொருள்களென்று சுவாமியார் எப்படி அறிந்தார். கொண்டுவந்தவற்றைக்கொண்டு பூசை செய்யாமலே இப்படிச் செய்து விட்டாரே என்று அவர் சிந்திக்கலானார். இச்சம்பவம் ஒருயர்ந்த கருத்தை உபதேசிக்கின்றதை உணர்ந்தேன்.

நாம் ஒன்றை ஆண்டவனுக்கென ஒதுக்கிவிட்டால் பின்னர் அதனை ஆண்டவனின் வாயினுள் திணித்துவிட வேண்டும் என்ற கவலை வேண்டியதில்லை, மனமார ஒன்றை நாம் அர்ப்பணித்துவிட்டால் ஆண்டவன் அதனை ஏற்றுக்கொள்கின்றார். பின்பு அவற்றை ஆண்டவன் எவ்வாறு தமது தேவைகளுக்கு உபயோகித்துக் கொள்ளுகின்றார். தமதுகுழந்தைகளுக்கு எவ்வாறு வழங்குகின்றார். அப்பொருள்கள் எப்படி உபயோகிக்கப்படுகின்றன. அல்லது பிராமணர்தான் அவற்றையெல்லாம்எடுத்துக்கொள்ளுகின்றாரா? என்பன போன்ற கவலைகள் ஒன்றும் எங்களுக்கு வேண்டியதில்லை அக்கவலை எமக்கிருக்குமாயின் நாம் செயலளவிற்றான் அர்ப்பணிக்கின்றோமேயன்றி மனமார அவற்றினை அர்ப்பணிக்கவில்லை யென்றாகின்றது. இக்காலத்தில் பலர் இவ்வாறான ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். அதாவது சுவாமிக்கு பால் பழம் ஆதியனசமர்ப்பிக்கின்றோமே அவர்அவற்றைஉபயோகிக்கின்றாரா? என்று ஆராய முற்படுகின்றனர். இத்தகையஆராய்ச்சிகளின்முடிபு என்னுகின்றது? கையிலுள்ள பணம்வீண்விரயமாகின்றது. நம்பிக்கை கெடுகின்றது. தெய்வபக்தி உள்ளதும் அழிகின்றது. முடிவு அனர்த்தந்தான் இந்தப்போதனையை இச்சம்பவவாயிலாக உணரமுடிகின்றது "ஊருக்குச் செல் நன்கு கடவுளை வழிபடு அப்படிச்செய்தால் காலவரையில் உங்கள் கஷ்டங்கள் நீங்கிவிடும்" என்று வந்திருந்தவருக்குச் சுவாமிகள் கூறினார்கள். அவரும் வணங்கிச் சென்றார்.

சுவாமிகளைத் தரிசித்துவிட்டு உடனேயே திரும்பிச் செல்வனாக வந்தயான், நாட்களோ மூன்று கடந்து விட்டன. தில்லைத் திருக்கூத்தனின் தரிசனமோ இதில் மறைந்து விட்டது. ஞானப்பழம் அல்லவா அது ஞானம் வேறு, பழம் வேறு எணறெண்ணுதபடி ஞானமே பழமாக உள்ளதல்லவா? புசிக்க வந்த என்னையே அந்தப்பழம் புசித்துவிட்டது. மூன்றாவது நாளும் கடந்து நாலாவது நாளும் விடிந்தது. காலைக்கடன்களை முடித்து விட்டு வரும் போதுதான் பிரயாணத்தின் ஞாபகம் மனத்தே தோன்றியது. ஞானப்பழத்தை புசித்து அதன் ரசனையிலே ஊறிவிட்டிருந்த எனக்கு பிரயாணத்தை மேற்கொள்ளாது. இங்கேயே தங்கிவிட்டா

லென்ன? என்று மனம் அலைமோத ஆரம்பித்தது. ஆனால், அவசரமாக இலங்கைக்குத் திரும்பவேண்டிய நிர்ப்பந்தம்-அதாவது ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளுக்கு உடனே வருவதாக அறிவித்திருந்தேன். அதன்படி இலங்கைக்கு வந்தேயாகவேண்டும் என் மனம் நிம்மதியற்றிருந்தது. ஒருவாராக சுவாமிகளிடம் புறப்படுவதற்கு உத்தரவு பெற்றேன். வேறு இடங்கட்குச் செல்லும் பிரயாணங்களை யெல்லாம் பிற்போட்டுவிட்டு இலங்கை புறப்படலாயினேன்

நான் உண்ட பழமோ என்றால் 145 ஆண்டுகளாக முதிர்ந்து கனிந்த பழம் தேடக்கிடைக்காத திவ்ய பழம். சிறந்த ஞானப்பழம் இவ்வாறான ஞானப்பழங்களை அடிக்கடி புசிக்கும் வாய்ப்புக்கிடைக்கப்பெறுபவர்கள் காலவரையில் தாங்களும் ஓர் ஞானப் பிஞ்சாகவாவது மாறிக்கொள்ளலாம். சாதாரணமாக எல்லோருக்கும் இது கிடைக்கக்கூடியதன்று ஆண்டவனே அவருருவில் மக்களுக்கு காட்சி தருகின்றார். அன்பது என்னாகம். தென்னாடு செல்லும் அன்பர்கள் இந்த ஞானப்பழத்தினை புசிக்கத் தவறிவிடக்கூடாதே என்பதற்காகவே இதனை எழுதலாயினேன். சுவாமிகளே இம்முதிர்ந்த வயதிலும் மிகவும் திடகாத்திரமாயும், தனது கருமங்களைத் தானே கவனித்துக் கொள்வதுமல்லாது, அங்குவருபவர்களையும் கவனித்துக்கொண்டும் இருக்கின்றார். அப்பெரியாரை ஈழவழநாட்டுக்கும் வரும்படி அழைத்தால் ஈண்டுள்ளோரும் பயன் பெறலாம் அவ்வாறாய ஞானிகள் எமது நாட்டுக்கு வந்தாலே எங்கள் கஷ்டங்கள் நிவர்த்தியாகிவிடும்.

“தென் முகக் கடவுளாகிச் சிற்பொருள் காட்டி யெங்கள்
தொன்மலக் கட்டறுத்துச் சுடரொளி ஆன்மஜோதி
நன்மனத் தோங்க நாட்டும் நாயகன். ஞானானந்தர்
பொன்மார்த் தாழ்கள் போற்றிப் புவியினில் வானங்காண்பேபம்”

“ஞானத் தழலால் மலம் மூன்றும் எரித்து நமனார் தலைமீதே
மோனத் தழகால் நடனமிடும் முத்தன் கண்டீர் முந்தியின்மேல்
தானத் திருந்து எமையாளும் தந்தை பெண்ணை அண்மைதவக்
கானத்திருந்து அருள் புரியும் கடவுள் ஞானானந்தரிவர்”




## நான்கண்ட கலைப்புலவர்

இது கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் ஆசிரியத் தொழிலிலிருந்து இளைப்பாரியபோது அவர் கல்வி, கலை, சமயம், நாடு ஆகிய வற்றிற்கு ஆற்றியுள்ள பணியைப் பாராட்டு முகத்தால் வெளியிடப்பெற்ற நூலாகும். யாழ்பாணம் மத்தியகல்லூரி நூல் நிலைய நிர்வாகி திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களால் எழுதப்பெற்றது. கலைப்புலவர் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் 38 ஆண்டுகள் செய்த சேவையுடன் கலைக்குச் செய்த சேவையும் இந்நூலில் பின்னிக்கிடப்பதை நன்கு அறியலாம்.

## வழிபாடு

பன்னிருதிருமுறைப்பாடல்கள், பஜனைப் பாடல்கள் நாமாவளிகள் கொண்டதோர் தொகுப்பு. கூட்டுவழி பாட்டுக்கேற்ற நூலாகும். கையடக்கமான புத்தகம், ஒவ்வொரு வீடுகளிலும் இருக்கவேண்டியதோர் நூல்.

விலை சதம் 25 மாத்திரமே

ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி
என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## கேதார் பத்திரியாத்திரை.

கேதார் பத்திரியாத்திரை என்ற நூல் நேரில் அன்பர் ஒருவர் அநுபவித்த யாத்திரை அநுபவங்களைக்கொண்டு எழுதப்பெற்றது.

விலை தபாற்செலவுட்பட 75 சதங்கள் மாத்திரமே
ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி.

## ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாசமேத முன்னநாத சுவாமி

# மஹோத்சவ விஞ்ஞாபனம்

:o:——

20–8–59 வியாழக்கிழமை கொடியேற்றமாகி விழாக்கள் நடைபெற இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 11-9-59 | வெள்ளி மாலை | - சிவனடியார் திருவிழா |
| 12-9-59 | சனி மாலை | - பிக்ஷாடனர் திருவிழா |
| 13-9-59 | ஞாயிறு | - நடேசர் திருவிழா |
| 14-9-59 | திங்கள் | – வேட்டைத் திருவிழா |
| 15-9-59 | செவ்வாய் | - தேர்த் திருவிழா |
| 16-9-59 | புதன் | - தீர்த்தத் திருவிழா |

சி. பாலசுப்பிரமணியக் குருக்கள்
ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான ஆதீன
பரிபாலனகர்த்தா.

---

ஓம்

## பொன் மொழிகள்.

சுகம் தங்கிநின்ற வரையில் யாதொரு புதுமையும் கண்டுபிடிக்கப்படவில்லை. கண்டுபிடிக்கவும் முடியாது.

பிறரிடமிருந்து எதிர்பார்க்கும் நிலையில் காரியம் செய்யாதீர்கள்! நிஷ்காமிய கர்யாவை செய்யுங்கள்.

தேடுகின்றவராக இருக்கவேண்டாம் எப்போதும் ஒளியும் அன்பும் வீசிக்கொண்டே இருங்கள்.



# ரமணர்

*

என்னை யறிந்திட எனக்கருள் வேண்டும்
என்மனக் கோயிலின் எழில்காண வேண்டும்
பொன்னையும் இப்புவியில் பொருளையும் யான்
பொழுதினில் துறந்து மறந்திட வேண்டும்
உன்னையறி என்ற ரமணேசன்
உண்மையொளி காண வேண்டும்
என்னையறிந்து யான் என்னுளின்பம்
என்றும் இனி கொள்ள வேண்டும்.

நா. சச்சிதானந்தர்

ஓம்

## பொன் மொழிகள்.

சொர்க்க சுகம் உள்ளேயே இருக்கின்றது. புஸ்தகங்களிலும், கோவில்களிலும், புண்ணியஸ்தலங்களிலும் மகான்களிடமும். சுகங்களைத் தேடுவது வீண், தனியே உட்காருங்கள் உங்கள் துக்கத்தைத் தெய்வத்தன்மை பொருந்திய ஆரனர்த மாகவே கொள்ளுங்கள்.

ஓம்

# ஸ்ரீ இராமதீர்த்தரின் பொன் மொழிகள்

—❋✠❋—

நீங்கள் செலுத்தும் அன்பிற்காக உடனே ஏதாவது பலன்கள் தோன்றும் என்று எதிர்பாரா தீர்கள். ஊழியம் செய்வதுடன் திருப்தியடைவாய் ஊழியம் செய்வதே பெரும் வெகுமதியாகும்.

தாயே அதைரியப்படவேண்டாம். எப்போதும் விஷயங்களில் நல்ல குணத்தையே சிந்தனை செய் வாய்! ''ரோஜா புஷ்பம் என்றால் முட்கள் மூர்தி யுண்டு'

ஒருவரிடம் ஏதேனும் ஒரு விஷயத்தில் குறை இருந்தால் அவரிடமிருக்கும் மற்ற நல்ல குணங்களை யும் மதிக்காமல் ஒழித்துவிடவேண்டாம்.

ஒருவனை திருடன் என்று சொல். உடனே அவன் திருடுவான். இது சுத்தம் இது சுத்தமில்லை என்று சொல்லிக்கொண்டு திரிய நமக்கு ஏது பாத் தியம்? கடவுளுடைய உடை போலீஸ் படையில் நமக்கு உத்தியோகமா?

பிறர் அப்படி இப்படி என்று ஆராய்வதில் செல்லும் காலமும் சக்தியும் நம்மை நாம் திருத் துவதில் செலவாக வேண்டி இருக்கிறது. நமது லட்சியம் ஏதுவோ அதில் நாம் தவறுமலிருக் கின்றோமா? என்று கவனிக்க வேண்டியது அதிக அவசியம்.

பெருமையைத் தேட வேண்டும்என்று நினைக் கும் எண்ணமெல்லாம் பரிசுத்த எண்ணங்களல்ல பலஹீனமே அது

# ஆத்மீகவிடுதலையே வாழ்வின்வேட்கையாகும்

(செல்வி: C. மதார் நாச்சியா)

வாழ்வு வறட்ச்சியான பாலைவனமா? அல்லது பசுமையான பூஞ்சோலையா?

வாழ்க்கை என்பது எண்ணங்களின் இயக்கங்களால் ஏற்படுத் தப்படும். இன்ப துன்ப உணர்ச்சிகளா? அல்லது எண்ணங்களின் -ஆசைகளின் கட்டுகளிலிருந்து முற்றிலும் விடுபட்டு புதியதோர் நிலையில் வாழ்வதா? நேற்றைய எண்ணங்கள் அல்லது பழைய அனுபவங்கள் மனதைக் கலக்கிவிட்டு சமநிலைகுலைவதானல் அதை சிந்தனை என்று சொல்வதா? அல்லது எண்ண எழுச்சிகளின் சூட் சம திருவிளையாடல் என்று வர்ணிப்பதா?

எந்த விஷயத்திலும் திடீர் முடிவுக்கு வரும் மனம் அல்லது விருப்பினாலோ, வெறுப்பினாலோ அசைக்கப்பட்ட மனம் ஒழுங்காக வாழ வழி காட்டுமா?

வாழ்க்கையை எண்ணங்களின் கோணத்திலே பார்த்தால் இன் பமாகவும் துன்பமாகவும் தோற்றமளிக்கும். ஆனால் எண்ணங்களை சம்பூர்ணமாக விளங்குவதுதான் வாழ்வின் உயரிய லட்சியமா கும். எண்ணங்களை எவ்விதம் விளங்க முடியும்? தினசரி வாழ்வில் பல நிகழ்ச்சிகளிலும் எப்படி நமது எண்ணங்கள் பிரபலிக்கின்றன என்பதை கூர்ந்து நோக்க வேண்டும். எண்ணங்களை அறியுந்திற மை மனதிற்குக் கிடையாது. ஏனெனில் மனம் எண்ணங்களின் தொகுப்பேயாகும் இன்பதுன்ப அனுபவத்தை ஆதாரமாகக் கொ ண்டு இயங்குவதே மனமாகும். ஆகவே எண்ணங்களின் அசைவு களற்ற இடத்திலே தான் எதையும் உள்ளது உள்ளபடி உணரமுடி யும்,

என்றும் அழியாததும், ஆனந்தமும் அமைதியும் தரக்கூடிய துமான நம் ஆத்மாவை அறிவதே இவ்வுலக வாழ்வின் புனிதக் கடமையாகும். அந்த உயர்தரபான லட்சியத்தை இம்மானிடப் பிறவியிலேயே அடைந்தாக வேண்டும். நாமும் ஆத்மாவை அடையவேண்டுமானல் எவ்வித பொருட்கள் மீதும் ஆசையற்றி ருக்கவேண்டும். பரிசுத்த மனதினால்தான் ஆத்மாவை உணரமுடி யும். எப்பொழுது ஐன்புலன்கள் அமைதியாக இருக்கிறதோ, எப் பொழுது மனமானது அசைவற்றிருக்கிறதோ, எப்பொழுது எண் ணஅலைகள் அமைதியைக் குழப்பாதிருக்கிறதோ அப்பொழுதுதான் அகண்ட வஸ்துவின் முழுத்தன்மையை உணரமுடியும்.

மனமற்ற ஆழ்ந்த தியான நிலையில் ஒரு இனிய அனுபவத்தைக் காணலாம். அல்லது ஒன்றுமில்லாத சூனியம் போன்ற சுக உண ர்வு தோன்றும். இந்த நிலையில் நமது ஆசைகள் யாவும் மறைந்து விடுகிறது. வாழ்வை புதிய கண்கொண்டு விருப்பு வெறுப்பில்லாது ஒவ்வொன்றையும் அதன் யதார்த்த நிலையில் கவனிக்கும் திறமை வந்தெய்தும் அமைதியான தியான நிலையில் இருந்து கொண்டு யாவற்றையும் சாட்சிமயமாக பார்ப்பதின் மூலமாகத்தான் வாழ் வில் உண்மையான ஆத்மீக விடுதலையை அடைய முடியும்.

# பெரியோர் கண்ட பூரண உண்மை

( ஸ்ரீ அரவிந்தர் )

உள்ளது ஒன்றே அது ஆதி அந்தமற்றது; யாதொரு சார்புமற்றுத் தான் தானாக விளங்குவது உண்மை, அறிவு. ஆனந்தம் அதன் இயல்பு. அதுவே பரம்பொருள், அதை நாம் முழுமுதற் கடவுள் என்கிறோம். ஒருவனேயாகிய அம்முழுமுதற் கடவுள், பலவாக இவ்வுலகுயிர்களாக –தன்னை வெளிப்படுத்திக்கொண்டு அவற்றுள்ஊடுருவிப்பரவி அவற்றை இயக்குகிறான், பரநிலையில் தனித்து விளங்கும் அவன் தன்னின்றுமே படைக்கும் படைப்பில் நீக்கமறப் பரவித் தன்னை உட்புகுத்திக்கொள்ளுகையில் தனக்கு இயல்பான அறிவு, ஒளி, இன்பங்களை மட்டுமன்றி அவற்றிற்கு நேர்மாறான அறியாமை இருள் துன்பங்களையும் ஏற்று, அவற்றுள் மூழ்கிறான். இது அவனது திருவுள்ளம்; அவனது திருவிளையாடல் இவ்வண்ணம் அவன் அந்தகாரத்திலும் அஞ்ஞானத்திலும் துன்பத்திலும் அமிழ உடன்பட்டதானது ஒரு பெருவேள்வியாகும். ஆயினும் அவன் தன்னியல்பில் யாதொருமாறுபாடும் அடைவதில்லை. அவன் யாதொரு தொடர்புமின்றித் தனித்திலங்கும் தன் பரநிலையில் எத்தகைய சுதந்திரத்தையும் இன்பத்தையும் அனுபவிக்கின்றானோ, அத்தகையசுதந்திரத்தையும் இன்பத்தையும் இவ்வுலக இருளிலும் அஞ்ஞானத்திலும் தன்னை உட்படுத்திக்கொள்ளும் நிலையிலும் அனுபவிக்கிறான். மேலும் சிருட்டிப்பொருள்கள்யாவும் அவனின்றே உதிப்பனவாதலலும் அவன் அவற்றில் பரவி அவற்றை இயக்கியும் தாங்கியும் வருவதாலும், அவனுடைய உணர்வில் தனக்கும் அவற்றிற்கும் யாதொருபேதமும் எழுவதில்லை,

இருப்பவன் ஒருவனே எனக் கூறினோம். அவ்விதமாயின், அவனினும் உயர்ந்தவன் எவனும் இருக்கமுடியாது என்பது தெளிவு, அவனது அலகிலா ஆற்றலைக் கட்டுப்படுத்தக் கூடிய வேறெதுவும்



இருக்கமுடியாது. அவன் இன்னதுதான் செய்யமுடியும் இன்னது செய்யமுடியாது என்னும் வரையறை இருக்கமுடியாது. ஆதலால் ஒருவனாயிருப்பவன் பல உருவங்கள் எடுத்துக்கொள்ளலாம். அவனது ஒருமை பன்மையாகப் பரிணமிக்கலாம். எங்கும் பரவியுள்ளவனாயும், எல்லாவல்லமை உடையவனாயும், ஒளி எல்லாமாயும் உள்ள இறைவன் இம்மானிட உடலில்புகுந்து, அவதாரபுருஷனாக விளங்கலாம். உலகைச் சார்ந்த இருளும் அஞ்ஞானமும் அவனைக் கட்டுப்படுத்தாவாதலால். தானே சுயேச்சையாக இவற்றை அவன் ஏற்றுக்கொள்வதற்குத் தடையாதுளது? அவனால் யாவும் இயலுமெனில், அவ்விதம் இயங்குவதனால் அவனது கடவுட்டன்மைக்கு இழுக்கேற்படுமா, நன்மை, தீமை, வலிமை, எளிமை, புண்ணியம், பாவம் ஆகியயாவும் அவன் உண்டாக்கியவையேயாயின், அவன் நன்மையிலும் புண்ணியத்திலும் வலிமையிலும் இருப்பதைப்போலவே, தீமையிலும் பாவத்திலும்எளிமையிலும்இருக்கமுடியாதா? அன்பும் அருளும் அவனது செயலாக இருப்பதைப் போலவே. போரும் பகையும் அவனது செயலே எனக் கொள்வதில் தவறுண்டோ, யாவும் அவனது திருவிளையாடலேயன்றோ?

இதுவே பூரண உண்மை, இப்பூரண உண்மையில், நமது பார்வைக்கு ஒன்றுக்கொன்று நேர்முரணாகக் காணப்படும் பொருள்கள் யாவும் அடங்கும். இவ்வுண்மையுடன் ஒன்றினால் நாம் இவ்வுலகில் காணும் முரண்கள், பிணக்குகளாகியயாவும் ஒன்றோடொன்று இணைந்து சர்வசமரசபாவம் ஏற்படும்,



# ஞானப் பிழம்பு - பொறி 2

[ *மீரா—பஜன்* ]

மோஹிம் லாகீ, 3 லக, 3 ன கு, 3 ரு சரனன கீ
சரனன பி, 3 ன கசு, 2 வை ந ப, 4 ாவை
ஜக,3 மாயா ஸப்,3 ஸபனன கீ — (மோஹிம்)
ப,4 வஸாக,3 ர ஸூகி, 2 க, 3 யோ ஹை
பி, 2 கர நஹிம் மோஹிம் தரனன கீ — (மோஹிம்)
மீரா கே ப்ரபு, 4 கி, 3 ரித, 4 ர நாக, 3 ர
ஆஸ வஹீ கு, 3 ரு ஸரனன கீ — (மோஹிம்)

பதவுரை:— மோஹிம்= முஜே= எனக்கு; கு,3 ரு= ஸத் குருவின்; சரனன கீ சரணங்களை, திருவடிகளைப் பற்றிய; லக, 3 ன = தொடாச்சியான, இடைவிடாத நினைவு உணர்ச்சி; லாகீ,3 = ஏற்பட்டது; (அது முதல்) சரனன பி,*3* ன = (கண்ணனாகிய) ஸத்குருவின் சரணகமலங்கள் தவிற; கசு,2 வை = வேறு வொன்றுமே; பா, 4 வை ந= (தஞ்சம்) என்ற எண்ணம் பிறக்கவில்லை, (துணையாகும்) என்ற நினைவே தோன்றவில்லை; (இடையறாது உன் திருவடித் யானத்திலேயே இருந்த எனக்கு) மாயா ஜக, *3* = மாயை நிறைந்த இவ்வுலகில்; ஸப, *3* = எல்லாமே, (கண்ணா உன்னையன்றி) வேறுயாவும்; ஸப்னன கீ = ஸொப்பனத் துக்கு ஸமமானது தான், கனவுபோல் கணத்தில் மறையக் கூடியது தான்; (என்றறிந்தேன்) [உன் அருளால்] ப, 4வ ஸாக, *3* ர = பிறவி எனும் பெருங்கடல்; ஸூகீ, 2 = உலர்ந்து, காய்ந்து, வற்றி, க, 3 யோ ஹை = போய்விட் டது; [ஆதலின்] மோஹிம் எனக்கு; தரனன கீ = கடந்து செல்வது பற்றிய, தாண்டிச்செல்லவேண்டிய, பி,2 கர் = கவலை, ஏக்கம், நஹி. = இல்லை, இல்லாது ஆகிவிட்டது; மீரா கே = மீராவாகிய எனது; ப்ரபு, 4 — ப்ரபோ; தேவா*!* ; கி, *3* ரித, 4 ர = கோவர்த்தன கிரியைத் தாங்கியவா*!* நாக, *3* ர = கண்ணா, கு, *3* ரு = எனது குரு நாதனாகிய உன்னை; ஸரனன கீ = தஞ்சமாக அடைந்த தாலுண்டான; ஆஸ் =[உனது] அருள்தான், ஆசியினால்த் தான்,; ஆசியேதான்; வஹீ [ஹை] இவ்வாறாக, மேற்

# ஸத்குரு ஆசியின் பெருமை

கண்டபடி ஏற்பட்டது.

குரு சரணங்களே தான் தஞ்சமென்றுணர்ந்தேன்
குரு சரணங்களின்றி கெதி வேறெண்ணிலேன்
விரியுலகில் யாவும் வெறுங்கனவே யன்றோ — [குரு]

பிறவிப் பெருங்கடல் நீர் வறண்டு காய்ந்ததே
கரை சேரத் தவித்த கவலையும் ஓய்ந்ததே — *[குரு]*

மீராவின் ப்ரபோ*!* கிரிதர கோபாலா*!*
குரு அருளாலே நற்பயன் அடைந்தேன் — *[குரு]*

கருத்துரை:- கண்ணனையே தனக்கு வழிகாட்டுங் குருநாதனாக வரித்து, பக்திகொண்ட மீராபாய் குருவின் ஸத்குருவாகிய கண்ணனின் சரணாரவிந்தங்களில் மன லயம் ஏற்பட்டு அவைகளே தஞ்சமென்று ஸதாநினைக்கும் மயக்கத்தில் ஈடுபட்டாள. அவ்வாறு திருவடித்யானம் செய் வது தவிற வேறு எதிலுமே, அவ்ள் மனம செல்லவில்லை, நாடவில்லை. அதனால் மாயைசூழ்ந்த இந்த உலகத்தை உலகில் தோன்றும் யாவுமே வெறுங்கனவாகக் கருதலானாள் குருநாதனாகிய கிரிதரக்கண்ணனின் க்ருபாகடாக்ஷத்தால், ஆசியினால், பிரவியெனும் பெரும் கடல் நீர் முழுவதும் காய்ந்துபோக, வற்றிப்போகச் செய்து விட்டபெருமை கண்டு, பிறவிக்கடலைக் கடக்கும் கவலையே இல்லாது அருள்பாலித்து விட்டான் கண்ணனாகிய குருநாதன் என்ற தன் அனுபவத்தை, மனநிறைவை எடுத்துக்கூறுகிறாள் மீராபாய் அன்னை. அடியார்களாகிய நாமும் குருநாதனைத் தஞ்சம் புகுந்து ஆசிபெறுவோம்.

ஹரிஹர ராம்

# யோக ஆசனங்கள்

( S. A. P. சிவலிங்கம்-சேலம் )

## 75, பைரவாசனம்; [விமர்சனம்]

:o:

சுத்தமான சமதள விரிப்பின்மேல் காள்கள் இரண்டையும் முன்பக்கம் நீட்டியவாறு உட்காரவும்.

பின் பத்மாசனம், பஸ்சிமோத்தாஞசனம், ஹலாசனம், முதலிய சில செய்து அங்கங்களை இளகவைத்துக் கொள்ளவும்.

ஆரம்பத்தில் உட்கார்ந்த நிலையிலேயே மூச்சை வெளிவிட்டுக்கொண்டே வலதுகாலை இரண்டு கைகளாலும் பிடித்து மடக்கி வேகமின்றி நிதானமாகக் குனிந்து காலை தோள்பட்டையில் பிடரியில் மேல் வைக்கவும். பின் குனிந்த நிலையை நிமிர்த்தி நேராக அமரவும், மார்பு, முதுகு வளையாமல் இருக்கவும், இடதுகால் நேராய் பாதவிரல்கள் மேல்பார்த்தவாறு கீழேயிருக்கவும். கைகள் முழங்கையுடன் மடக்கி இரண்டையும் மார்புப் பக்கமாய் நமஸ்காரம் செய்வதைப்போல் கூப்பிவைத்திருக்கவும்- கழுத்து வளையாமல் இருக்கவும், பார்வை நேராய் இருத்தல் வேண்டும். இந்நிலையில் பலதடவை சுவாசத்தை சற்றுதீவிரமாக உள்ளிழுத்து வெளிவிடவும் தேவைப் பட்டால் மீண்டும் செய்யலாம் இவ்வாறு மற்ற இடதுகாலையும் மாற்றிச் செய்யவும்.

சித்திரம் 75-பார்க்கவும்.


கலைப்பித்தல்;- கும்பிடும் நிலையில் இரண்டு கைகளையும் எடுத்து முதுகை முன்பக்கம் குனிந்து வலது காலை கழுத்துப்பட்டையிலிருப்பதை எடுத்து நேராய் நீட்டி பின் மல்லாந்து படுத்து சிரமபரிகாரம் செய்து கொள்ளவும்.

சாதகர்களுக்குச் சற்றுகடினமான ஆசனம்: ஆனால் எவ்வளவு தூரம் கால்களை மேல்தூக்குகின்



றோமோ அவ்வளவுக்கு மிகவும் நல்லது.

செய்வதின் பலன்கள்:- கால் கழுத்துக்குப் பின் இருப்பதால் தொடைக்கும், அதன் நரம்புகளுக்கும் எலும்புகளுக்கும் இரத்தோட்டத்தையும் கொடுத்து, வளர்ச்சியையும் அதிகரிக்கச் செய்கின்றது வாதமித்த சம்பந்தமாக வியாதிகள் நீங்கும் இருதயத்துடிப்பு, மூளைக் கோளாறு இவைகளை அறவே நீக்கும். தோள் பட்டைவலிமைபெறும். இருதயம்சமநிலையடையும் ஆண்.பெண் அனைவரும் செய்யலாம். கெற்பகாலம் ருது காலம், மாதவிடாய் காலங்களில் பெண்மணிகள் செய்யக் கூடாது.




நேயர்கள் கவனத்திலிருக்க வேண்டியமுக்கியமானவிதி;- ஆசனங்கள் செய்யும் சமயம் தும்மல் கொட்டாவி. சிரிப்பு, கவலை, பேசுதல், ஆத்திரத்துடன் ஆசனத்தைச் செய்தல், இருட்டில் செய்தல் முதலியவைகளை நீக்கி விட்டொழிக்கவும்.

அவ்வாறு நிர்ப்பந்தமாகப்பேச வேண்டியதிருப்பின் முன்கண்ட குணங்களை அனுசரித்த பின் ஆசனங்களைச் செய்யவும்.



# அருளுரை

1. பற்றகன்று தைலதாரைபோல் எக்காலமும் ஆத்மத்தியானம் பண்ணிக் கொண்டிருப்பவனுக்கு பேராறுபோல் பேரின்பம் கரைபுரண்டோடும்.

2. புலனடக்கம் பெறுவதும் அதைப் பிறருக்குப் போதிப்பதும் சிறந்த சமூகசேவையாகும்.

புலனடக்கம் பெற்றவரின் தொகை அதிகமாகவுள்ள சமூகம் நன்கு உயிர்வாழ்ந்து மற்றவர்களையும் நன்கு வாழவைக்கின்றது.

3. "துன்பமே" உனக்கு நல்வரவுஎன்று கூறி துன்பத்தை வரவேற்கும் தீரன் எக்காலமும் மாசற்ற பேரின்பத்தை அனுபவிக்கிறான். அத்தகையவன் மூப்பு, பிணி, வறுமை இவைகளால் துயரப்படான்.

4. ஆத்ம சாதனையால் சமபுத்தி பெற்றவன் பாவ புண்ணியங்களை யகற்றி பராபுருஷனை நிச்சயம் அடைகிறான்.

— கெங்காதரானந்தா —


உ
நல்ல விநாயகர் துணை

## ஸ்ரீ முன்னேஸ்வரம்
## திருக்குளத்திருப்பணித் தரும விஞ்ஞாபனம்

திருவருள் நிறைந்த ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்ரத்தில் சிவதீர்த்தமென்ற திருக்குளத்திருப்பணிக்கு சுமார் 60,000 ரூபாய் வரையாகுமென மதிப்பிட்டு கருங்கல் வேலை நடந்து வருகிறது. இப்பெருஞ் சிவ கைங்கர்யத்துக்கு புண்ய சீலர்களனைவரும் தங்களாலியன்ற பொருளுதவி செய்து ஸ்ரீ வடிவாம்பிகாஸமேத முன்னைநாதப்பெருமான் திருவருள் பெற வேண்டுகிறோம்,

இங்ஙனம்
சி. பாலசுப்ரமண்யக் குருக்கள்,
கர்த்தா.

## சர்க்கரை கொல்லி சூரணம் -
(DIABETES) என்னும்
நீரிழிவு மதுமேகத்திற்கு மிகச்சிறந்த சூரணம்.
யாவும் மூலிகையினால் சித்தர்களின் அனுபவ முறைப்படி
தயாரிக்கப்பட்டது.
சர்க்கரை வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு
அற்புத ஔடதம்.
தபாற்செலவுட்படடின் ரூபா 6-75.
SAMBU INDUSTRIES-SALEM 2 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:
ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி (சிலோன்)

*Registered at G. P. O. as a Newspaper M. L. 59-300*


# வாய்வு சூரணம்.

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக் கட்டு, மலபந்தம், அஜீரணம், கை கால் அசதி, பிடிப்பு, பசியின்மை, வயிற்றுவலி, பித்தமயக்கம், பித்த சூலை, புளியேப்பம், நெஞ்சுக் கரிப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரணசக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

**உபயோகிக்கும் முறை:-**

இந்தச் சூரணத்தில் ½ தோலா அளவு எடுத்து அத்துடன் ½ தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்கு முன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலை மாலை தொடர்ந்து உட்கொள்ளவேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக் கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய் நிறையச்சாப்பிடலாம். வாரம் ஒரு முறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினால் தயாரிக்கப் பெற்றது.

தபால்செலவு உட்பட டின்ஒன்று
3 ரூபா 75 சதம்.
[பத்தியமில்லை]

சம்பு இண்டஸ்ரீஸ் - சேலம் 2. (S. I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:-

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி**

மலாயாவில் கிடைக்குமிடம்:-

**மு. கணபதி அன் கம்பெனி,**
66, பெல்பீல்ட் ஸ்ரீட் - ஈப்போ.


*Printed by N. Muthiah at the Sri Murugan Press-Punduloya.*
*Published by N. Muthiah Athmajothi Niliyam, Nawalapitiya*